நகராட்சி அலுவலகம்,
புளியங்குடி,
நாள்.07.04.2022.

புளியங்குடி நகராட்சி மன்றத்தின் சாதாரண கூட்டம் 2022-ம் வருடம் ஏப்ரல் மாதம் 11.04.2022-ம் தேதி திங்கள்கிழமை காலை 11.00 மணிக்கு நகர்மன்ற தலைவர் அவர்கள் தலைமையில் மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெறும்.

நகர்மன்ற தலைவர்,
புளியங்குடி நகராட்சி

<u>சாதாரண கூட்டம்</u>

Date of Council	Decision No.	Subject in Agenda	Decision of Council
11.04.2022	19	**பொருள்.1** புளியங்குடி நகராட்சி ஆணையாளர் அவர்களின் மார்ச் 2022ம் மாத தினசரி நாட்குறிப்பு நகர்மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. **அலுவலக குறிப்பு**. பதிவு செய்யலாம்	அனுமதிக்கப் பட்டது.
	20	**பொருள்.2** புளியங்குடி நகராட்சி பொறியாளர் அவர்களின் மார்ச் 2022ம் மாத தினசரி நாட்குறிப்பு நகர்மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. **அலுவலக குறிப்பு**.பதிவு செய்யலாம்	அனுமதிக்கப் பட்டது.
	21	**பொருள்.3** புளியங்குடி நகராட்சி சுகாதார அலுவலர் அவர்களின் மார்ச் 2022ம் மாத தினசரி நாட்குறிப்பு நகர்மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. **அலுவலக குறிப்பு**. பதிவு செய்யலாம்	அனுமதிக்கப் பட்டது.
	22	**பொருள்.4** புளியங்குடி நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் அவர்களின் மார்ச் 2022ம் மாத தினசரி நாட்குறிப்பு நகர்மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. **அலுவலக குறிப்பு**. பதிவு செய்யலாம்	அனுமதிக்கப் பட்டது.

	23	**பொருள்.5** நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம் புளியங்குடி நகராட்சியின் ஆணையாளர், நகர்மன்ற தலைவர் மற்றும் பிற அலுவலர்களை வாதியாகவோ அல்லது பிரதிவாதியாகவோ சேர்த்து கீழ்நிலை நீதிமன்றம், உயர்நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றத்தில் தொடரப்படும் அனைத்து வழக்குகளின் விபரங்களை நகர்மன்ற தலைவர் அவர்களின் பார்வைக்கு வைக்கவும் அனுமதி பெறவும் மன்றம் ஒருமனதாக தீர்மானிக்கிறது.	அனுமதிக்கப் பட்டது.
	24	**பொருள்.6** நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம் புளியங்குடி நகராட்சியில் பணிபுரியும் அனைத்து உள் மற்றும் வெளி நிரந்தர பணியாளர்கள் மற்றும் தற்காலிக பணியாளர்களின் ஒவ்வொரு மாத ஊதியமும் நகர்மன்ற அனுமதி பெற்று பணியாளர்களுக்கு வழங்க மன்றம் ஒருமனதாக தீர்மானிக்கிறது.	அனுமதிக்கப் பட்டது.
	25	**பொருள்.7** நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம். புளியங்குடி நகராட்சியின் ஆணையாளர், நகர்மன்ற தலைவர் மற்றும் பிற அலுவலர்களை வாதியாகவோ அல்லது பிரதிவாதியாகவோ சேர்த்து சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் தொடரப்படும் வழக்குகளுக்கு நகராட்சி சார்பாக சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை வழக்கறிஞர் திரு.M.ராஜராஜன் என்ற வழக்கறிஞர் மூலம் வாதிடவும், சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் புளியங்குடி நகராட்சியின் வழக்கறிஞராக நியமனம் செய்திடவும், வழக்கிற்கான கட்டணம் நகராட்சி மூலம் வழங்கிடவும் மன்றம் ஒரு மனதாக தீர்மானிக்கிறது.	அனுமதிக்கப் பட்டது.
	26	**பொருள்.8** புளியங்குடி நகராட்சி பகுதிகளில் மொத்தம் 23985 வீடுகள் உள்ளன. மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியை ஒட்டிய பகுதியாக உள்ளதால் அடிக்கடி மழைப்பொழிவு ஏற்படுவதால் கொசு உற்பத்தி ஆகக்கூடிய சூழல் உள்ளது. மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களது சுற்றறிக்கை எண்.2571/2017/J1, நாள்.28.11.2017 மற்றும் சுற்றறிக்கை எண்.20751/2019/J1, நாள்.17.09.2019-ன்படியும்,, 10.06.2015-ம் தேதிய கூட்ட நடவடிக்கையின்படியும், டெங்கு காய்ச்சல் பரவுவதை தடுக்க 300 வீடுகளுக்கு ஒரு பணியாளர் வீதம் மொத்தம் 80 பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். தற்போது	அனுமதிக்கப் பட்டது.

		தற்காலிக நோய்த்தடுப்பு பணியாளர்கள் சுயஉதவிக்குழு மூலமாக பணிபுரிந்து வருகின்றனர். நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களது சுற்றறிக்கை எண்.2571/2017/J1, நாள்.28.11.2017 சுற்றறிக்கையில் DBC பணியாளர்கள் வருடம் முழுமைக்கும் 300 வீடுகளுக்கு ஒரு பணியாளர் என்ற விகிதத்தில் நோய்த்தடுப்பு பணிகள் இடையூறின்றி நடத்த வலியுறுத்தி உள்ளார்கள். மேலும் அச்சுற்றறிக்கையில் தற்காலிக நோய்த்தடுப்பு பணியாளர்கள் வெளிக்கொணர்வு முறையில் நியமிக்கவும் தெரிவித்துள்ளார்கள். எனவே டெங்கு மற்றும் கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் தொய்வின்றி மேற்கொள்ள தேவைப்படும் 80 பணியாளர்களை சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அனுமதி பெற்று வெளிக்கொணர்வு முறையில் நியமிக்கவும், அதற்கு ஆகும் வருடாந்திர செலவினம் ரூ.1.70 கோடிக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.763/2022/எச்1)	
	27	**பொருள்**.9 புளியங்குடி நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு வாகனம் TN-76-Y-0217 திடக்கழிவு டிப்பர் வாகனத்திற்கு 01.03.2022-ல் தகுதிச்சான்று முடிவடைவதால் வாகனத்தில் உள்ள பழுதுகளை கீழ்க்கண்ட உதிரி பாகங்கள் பொருத்தி சரிசெய்ய வேண்டுமென திரு.மாரியப்பன், ஓட்டுநர் அறிக்கையை ஏற்று இப்பணி மேற்கொள்ள ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.61,000/- (ரூபாய் அறுபத்தோராயிரம் மட்டும்) பொதுநிதியிலிருந்து வழங்கிட அனுமதி வேண்டப்படுகிறது. 1. வாட்டர் சர்வீஸ் செய்து கிரீஸ் அடித்தல், 2. 4வீல் கிரீஸ் பேக்கிங் செய்து பேரிங் மாற்றுதல், 3. கேபின் டிங்கர் பணிகள் செய்தல் 4. செல்ப் மோட்டார் சர்வீஸ் செய்தல் 5. வயரிங் செக்கப் செய்தல் 6. இன்ஜின் ஆயில், கியர் ஆயில், கிரவுன் ஆயில், கூல்டன் ஆயில், பிரேக் ஆயில், ஹைட்ரானிக் ஆயில் மாற்றுதல், 7. பெயிண்ட் அடித்து எழுத்துக்கள் எழுதுதல், 8. இன்ஜின் ஆயில் லீக் சரிசெய்தல் **அலுவலக குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம். 2. மேற்கண்ட மோட்டார் வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்திடவும், பணி மேற்கொள்ளவும்	அனுமதிக்கப் பட்டது.

		உத்தேச செலவு தொகை ரூ.61,000/- (ரூபாய் அறுபத்தோராயிரம் மட்டும்) நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கலாம். **(ந.க.எண்**.475/2022/**எச்**1)	
	28	**பொருள்**.10 புளியங்குடி நகராட்சிக்கு பாத்தியப்பட்ட புளியங்குடி பேருந்துநிலைய கடை எண்.3-யை திரு.N.மகேந்திரன், 42B, முப்புடாதியம்மன் கோவில் தெரு, புளியங்குடி என்பவர் மாத வாடகை ரூ.7125/-க்கு நகர்மன்ற தீர்மான எண்.765, நாள்.24.01.2017-ன்படி கடையை நடத்தி வந்தார். 2020-2021 மற்றும் 2021-2022 ஆம் ஆண்டுகளுக்கு கடை வாடகை செலுத்தாமல் இருந்ததால் இந்நகராட்சி மூலம் பூட்டி சீல் வைக்கப்பட்டது. மேலும் புளியங்குடி பேருந்துநிலைய மேற்புற கடை எண்.11, திரு.பாப்புலர் ஆறுமுகம், கற்பகவீதி 1ம் தெரு, புளியங்குடி என்பவர் மாத வாடகை ரூ.1524/- நகர்மன்ற தீர்மான எண்.1498, நாள்.28.10.2020-ன்படி கடையை நடத்தி வந்தார். மேற்படி குத்தகைதார்ர் காலமானதால் அவருடைய மனைவி திருமதி.P.பிச்சம்மாள் என்பவர் மேற்படி கடையை நடத்த முடியவில்லை என 15.03.2022-ல் கடையை நகராட்சியிடம் ஒப்படைத்து விட்டார். எனவே புளியங்குடி பேருந்து நிலைய கடை எண்.3 மற்றும் புளியங்குடி பேருந்து நிலைய கடை எண்.11 ஆகிய குத்தகை இனங்களின் உரிமங்களை ரத்து செய்து மேற்படி கடைக்கான உரிமத்திற்கு ஏல நடவடிக்கை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.2591/2017/அ1)	அனுமதிக்கப் பட்டது.
	29	**பொருள்**.11 இந்நகராட்சியில் 2011–ஆம் ஆண்டு கணக்கீட்டின்படி மக்கள்தொகை 66015 ஆகும். மொத்த பரப்பளவு 55.166 ச.கி.மீ. மொத்த சாலையின் நீளம் 54.888 கி.மீ. சிந்தாமணியில் 2 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, ஆர்.எஸ்.கே.பி. மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி, அரசு மருத்துவமனை மேல்நிலைநீர்த்தேக்கத் தொட்டி, இந்திரா நகர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, கற்பக வீதி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஆகிய 6 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளும் இந்நகராட்சி பகுதியில் உள்ளன. மேலும் இந்நகராட்சி பகுதியின் 8 கி.மீ. தொலைவில் உள்ள வாழைமலையாறு கிணறு, 5 கி.மீ தொலைவில் உள்ள தம்பிரான் கிணறு, மருதங்கிணறு, 8 கி.மீ. தொலைவில் உள்ள கோட்டமலையாறு தலைமை நீரேற்று நிலையத்திற்கு	அனுமதிக்கப் பட்டது.

		சென்று வரவும் தாமிரபரணி கூட்டுக் குடிநீர் திட்ட குடிநீர் ஆதாரமான சாத்துபட்டு என்ற இடத்திற்கு சென்று வரவும் மற்றும் பல்வேறு திட்டப்பணிகளை பார்வையிடவும் இந்நகராட்சியில் தற்போது பயன்பாட்டில் உள்ள குடிநீர் பிரிவு ஈப்பு வாகனம் TN-76–S-9237 குடிநீர் பணிகள் மற்றும் திட்டப்பணிகளை மேற்பார்வையிட நகராட்சி ஆணையாளர் மற்றும் பொறியாளரால் முழுநேரம் பயன்படுத்த வேண்டியுள்ளது. மேலும் நகர்மன்றத் தலைவர் பதவி இருக்கும் போது நகர்மன்றத் தலைவருக்கு ஆய்வு பணிகள் மேற்கொள்ள ஈப்பு வாகனம் தேவைப்படுகிறது. இதனால் அன்றாட பணியான குடிநீர் விநியோகம், தெருவிளக்கு பராமரிப்பு அடிப்படை வசதி பணிகள் மற்றும் திட்டப்பணிகள் ஆகியவற்றினை ஆய்வு செய்ய ஈப்பு வாகனத்தில் செல்ல இயலாத நிலை உள்ளது. மேலும் ஆணையாளர் தென்காசி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக மற்றும் திருநெல்வேலி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகத்தில் வைத்து நடைபெறும் ஆய்வுக்கூட்டத்திற்கு உரிய காலத்தில் ஆய்வுக் கூட்டத்திற்கு செல்லவும், இந்நகரில் நடைபெற்று வரும் அடிப்படை வசதி பணிகள், திட்டப்பணிகள், குடிநீர் விநியோகம், தெருவிளக்கு பராமரிப்பு போன்ற பணிகளை ஆய்வு செய்யவும் ஆணையருக்கு ஒரு ஈப்பு வாகனம் மிகவும் அவசியம் தேவைப்படுகிறது. எனவே நகர்மன்ற தலைவருக்கு தனியாக ஆய்வு பணிகள் மேற்கொள்ள ஒரு ஈப்பு வாகனம் தேவைப்படுகிறது. எனவே இந்நகராட்சிக்கு புதியதாக நகர்மன்ற தலைவருக்கு ஈப்பு வாகனம் வாங்குவதற்கு உரிய தொகை ரூ.13.00 இலட்சத்தை வங்கி வைப்புத்தொகைகளில் பெறப்படும் வட்டித் தொகையில் வாங்கி கொள்ளவும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **அலுவலக குறிப்பு**: மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்.682/2022/இ1)**	
	30	**பொருள்.12** புளியங்குடி நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் தற்போது 80 நிரந்தர துப்புரவு பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றார்கள். மேற்படி பணியாளர்களை கொண்டு 17 நகர்ப்பிரிவுகளில் குப்பைகள் பிரித்து சேகரித்து வாங்குதல், கழிவுநீர் வாறுகால்களை சுத்தம் செய்தல் உள்ளிட்ட திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கையின்படி இந்நகராட்சியில் அமைக்கப்பட்டுள்ள 4 பசுமை உரக்கிடங்கு மற்றும் RRC களில் குப்பைகளை	அனுமதிக்கப் பட்டது.

		உரமாக்கம் செய்யவும், மறுசுழற்சி செய்யக்கூடிய பொருட்களை பிரித்து மறுசுழற்சிக்குக்கு அனுப்பவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. மேற்கண்ட 80 நிரந்தர பணியாளர்களை கொண்டு பசுமை உரக்கிடங்கு மற்றும் RRC களில் பணி மேற்கொள்வதில் சிரமம் ஏற்படுகிறது. எனவே நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட அளவுகோலின்படி பசுமை உரக்கிடங்கு மற்றும் RRCயில் பணிபுரிய 25 தற்காலிக பணியாளர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலி அடிப்படையில் 01.04.2022 முதல் 30.06.2022 வரை பணியமர்த்திக் கொள்ள ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.7,20,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.610/2022/எச்1)	
	31	**பொருள்.13** நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.29280/2020/IT நாள்.31.03.2022-ல் இந்நகராட்சி கணிணி சேவை வரிவசூல் மையம் இயங்க தேவையான (V.P.N. Internet Connection) இணைய தளச்சேவைக்கு 01.07.2021 முதல் 31.012.2021 வரை உள்ள காலங்களுக்கு தொகை ரூ.96,590/- பி.எஸ்.என்.எல். நிறுவனத்திற்கு செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நகராட்சி வரிவசூல் சேவை மையத்தின் இணைய தள சேவை தொலைப்பேசி எண்.04636-233221க்கு 01.07.2021 முதல் 31.12.2021 வரை உள்ள கால பயன்பாட்டிற்கான தொகை ரூ.96,590/- (தொன்னூற்றி ஆறாயிரத்தி ஐந்நூற்றி தொன்னூறு மட்டும்) பி.எஸ்.என்.எல்., நிறுவனத்திற்கு செலுத்தவும் அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியில் செலவிடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1313/2017/பி4)	அனுமதிக்கப் பட்டது.
	32	**பொருள்.14** புளியங்குடி நகராட்சி - தினசரி மார்க்கெட் கட்டிடம் கட்டுவதற்கான பணிகள் மேற்கொள்வதற்கான இடத்தினை மண்பரிசோதனை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு அரசு பொறியியல் கல்லூரி திருநெல்வேலிக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தின்படி பட்டியல் தொகை வழங்குமாறு கேட்டு அரசு பொறியியல் கல்லூரி, திருநெல்வேலி அவர்களின் கடித எண்.22/GCE/Civil Consultancy/2022, நாள்.07.01.2022-ன்படி தொகை ரூ.21240/- செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே தொகையினை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.2377/2021/இ1)	அனுமதிக்கப் பட்டது.
	33	**பொருள்.15** புளியங்குடி நகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்க தற்காலிக நோய்த்தடுப்பு பணியாளர்கள் மூலம் வீடு வீடாக கொசுப்புழு கண்டறிந்து அழித்தல், கொசுப்புழு மூலம் கண்டறிந்து	அனுமதிக்கப் பட்டது.

		அழித்தல் போன்ற பணிகளுடன் தகுதி பெற்ற மக்களுக்கு கொரோனா தடுப்பூசி போட நடவடிக்கை மேற்கொள்ளல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் தற்காலிக நோய்த்தடுப்பு பணியாளர்கள் நியமனம் 31.03.2022 உடன் முடிவடைகிறது. புளியங்குடி நகராட்சி பகுதிகளில் மொத்தம் 23985 வீடுகள் உள்ளன. டெங்கு காய்ச்சல் பரவுவதை தடுக்க நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அறிவுரையின்படி 300 வீடுகளுக்கு ஒரு பணியாளர் வீதம் மொத்தம் 80 பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். எனவே 01.04.2022 முதல் 30.04.2022 வரை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட ஊதிய விகிதத்தில் தற்காலிக அடிப்படையில் பணியமர்த்திக் கொள்ளவும், அதற்கான செலவுத்தொகை ரூ.7,67,000/-க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.601/2022/எச்1)	

நகர்மன்ற தலைவர்,
புளியங்குடி நகராட்சி.